Edited by The Swami Vallinayakam.

THE VIVEKABHANU

A MONTHLY TAMIL JOURNAL.

விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"—திருக்குறள்.

வால்யூம் I] ஆகஸ்டுமீ [புத்தகம் 12

RENUNCIATION.

துறவு.

உலகத்தில் மனிதராய்ப் பிறந்துள்ளார் எய்தப்பெறும் ஆனந்தங்கள் பலவற்றுள்ளும் மேலானது மோக்ஷானந்தமாகிய பேரானந்தமே யெனப் பலர் கேட்டிருக்கலாம்; சிலர் அறிந்துமிருக்கலாம். கடவுளரது சொரூபம் ஆனந்தமேயாம். நாமெல்லாரும் கடவுளரின் மக்களென்பது ஆஸ்திகவாதிகள் யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். நாஸ்திகரும் "கடவுள்" என்னும் பதத்தை மறுப்பாரேயோ யன்றி அஃதாற் குறிக்கப்படும் பொருளை மறுக்கும் ஆற்றலுடையாரல்லர். என்னையெனின், அவர் வழங்கும் "சுபாவம்" (Nature) என்னும் பதம் நாம் கூறும் கடவுள் என்னும் மொழியாற் குறிக்கப்படும் பொருளையே உணர்த்தி நிற்கின்றமையாலென்க. அவர் கடவுளின் உண்மையை மறுப்பான் துணிந்தது ஆஸ்திகக்கொள்கையார் மந்த புத்தியுடையோர்க்காய்க் கற்பித்த கடவுளின் சொரூபத்தைக் கண்டேயன்றி கடவுளின் மெய்ச் சொருபத்தை அறிந்தார்பாற் கேட்டிருப்பாராயின் அவரதுண்மையைக் கனவிலும் மறுக்கத்துணியார் என்பது நிச்சயம். ஆயின் "சுபாவம்" என்னும் பதத்தாற் சுட்டப்படும் பொருளுக்கு ஆனந்தமே சொரூபமென அவர் அங்கீகரிக்கவில்லையே யெனின், அதனை அவர் நன்குவிசாரணை செய்யாக் குறையாலென்க. இது நிற்க, நாம் கடவுளரின் மக்களாகவே, நமது சொரூபமும் அவர் சொரூபமே யாகின்றது. என்னையெனின், காரண காரியங்கள் தோற்றத்தில் வித்தியாசமுடையனவேயன்றிப் பொருளில் வேறுபாடுடையன வல்லவாதலினென்க. ஆகவே நமது வடிவமும் ஆனந்தமேயாம் ஆயினும், காமமாதியாகிய பிரதிபந்தகங்களால் அது விளங்குகின்றதில்லை. ஏனெனின், மனமானது அவைகளால் சதா சஞ்சலத்தையடைகின்றது. குடத்திலிருக்கும் ஜலத்தின் சலனத்தால் அதிற் பிரதிபிம்பியாகின்ற சந்திரபிம்பம் கலங்கலாய் விளங்குகின்றதுபோல மனதின் சலனத்தால் ஆனந்தமும் விளங்குகின்று. காமமா

திகளோ உலகப்பொருள்களின் தோற்றத்தாலுண்டா மயக்கத்தினின்றுமெழுகின்றன. அம்மயக்கமோ அப்பொருள்களின் ஞானத்தால்மாத்திரம் நிவிர்த்தியாகத்தக்கது. அந்த ஞானமும் விசாரணையால் ஜனிக்கத்தக்கது. மாயை என்னும் இருளால் மூடப்பட்டிருக்கும் இவ்வுலகின்கண் ஞானமென்னும் ஆதித்தன் உதித்து, அதிலுள்ள பொருள்களின் உண்மை நிலையைத் தோற்றுவிக்கும்வரை விசாரணையென்னும் கைத்தீபமேனும் கொண்டு செல்லாராயின், மாந்தர் பூத இருளிற்கட்டையைக் கண்டு கள்ளனெனக் கொள்ளுதற்போல யாவற்றையும் விபரீதமாகவே கோட நேரும். விபரீதமாகக்கோடவே அது காரணமாய்ச் செய்யும் சகல பிரவர்த்திகளும் விருதாவாம். ஆகவே வாழ்க்கை பயனற்றதாய் முடியும். அத்தகைய பயனற்ற வாழ்க்கையை வாழ்க்கையெனக் கூறார் விவேகிகள். ஆதலின் நமது வாழ்க்கை பயன் பெறுமாறு நாம் யாவரும் அவ்விசாரணையிற் பிரவேசித்தல் அத்தியாவசியகம். அத்தகைய விசாரணையில் தேர்ச்சியடைவான் தந்தை, தாய், மனைவி, புத்திரன் என்னும் உயிர்ச் சார்பையும் மாடு, மனை, வீடு முதலிய பொருட்சார்பையும் விட்டு நீங்குதல் இன்றியமையாதது. ஏனெனின், மனம் பற்றுதற்கேதுவாய இப்பொருள்களின் மத்தியில் ஒருவன் எத்தனை காலமிருக்கின்றானோ அத்தனைகாலமும் அவைகளைப் பற்றிய விசாரங்களால் அவன் மனம் புண்படுத்தப்பட்டுத் தத்துவ விசாரணைக்கு யோக்கியமில்லாததாகின்றதாமென்க. அவைகளைப் புறத்தில் விட்டு நீங்காது அகத்தில் இச்சையை யொழித்திருப்பாமெனின், அஃது பொருளையே பொருளாய்க் கிரகித்த மெய்ஞ்ஞானிகளுக்குச் சாத்தியமேயன்றி ஏனையோர்க்கசாத்தியமேயாம். விசாரணையிற் புகுவாரை அத்தகையாரென் றுரைப்பவர் யாவர்? எவருமின்றாதலின், சாதகர் யாவர்க்கும் அங்ஙனம் விஷயங்களுக்கு மத்தியில் இச்சையை யொழித்திருத்தல் இயையாதென்க. சாதகருள் அத்தன்மைத்தாய வலியுடையாரின்றோவெனின், பொதுவாய் இன்றென்றே கூறலாமென்க. உளராலோவெனின் அவர் விலக்கே யாமென்க. பசியை அடக்கவிரும்பு மொருவன் ஆகாரம் கிடையாத விடத்தில் இருப்பானாயின் அப்பசியை அவன் ஒருவாறு அடக்குதல்போலும், அவனே சுவையுள்ள பதார்த்தங்களும் மதுரமான பழங்களும் இருக்குமிடத்தில் இருப்பானாயின் அப்பசியை அடக்குதல் கூடாததுபோலும் இந்திரியங்களுக்கு உணவாகும் விஷயங்கள் கிடையாத விடத்திலிருந்து இச்சையை விலக்குதல் சாத்தியமாயும், விஷயங்களுக்கிடையிலிருந்து கொண்டு அதனை யொழித்திருத்தல் சாதாரணமாய் அசாத்தியமாயுமிருக்கின்றது. மனு காயத்தில் தோன்றும் பொருள்களைப் பார்க்கிலும் பூதாகாயத்தில் தோன்றி இந்திரியங்களோடு சம்பந்தப்படும் பொருள்கள் மனதை இலகுவாய் வசீகரிக்கும் ஆற்றலுடையனவாயிருக்கின்றன. அதுபற்றியே மோக்ஷத்தில் இச்சையும் விஷயத்தில் வெறுப்புமுடையாரேனும், மேற்குறித்த பொருள்களை விட்டு நீங்கும் ஊக்கம் வரப்பெறுதார் அவற்றாலுண்டாகும் துக்கத்தை யோர்ந்தவராய்க் கவலையுறுவாரானார். தத்துவ விசாரணையிற்புகும் மனமானது மிக்க ஏகாக்கிரமாயிருக்க வேண்டுதல் பற்றி சதாசஞ்சலத்தைக் கொடுத்தற்கு ஏதுவாயிருக்கும் இருவகைச் சார்புகளையும் விட்டு நீங்குதல் ஆவசியகமே. ஆயினும், துறவென்பது உலகப்பொருள்களை தேசத்திலோ காலத்திலோ உடலால் விட்டு நீங்குதலோடமையாது. அமையுமெனின், தூரதேசத்திற் சென்றிருக்கும் சுற்றத்தாரையும், பிராரப்தகர்மத்தின் முடிவால் இவ்வுலகினின்று நீங்கும் மனைவியையும் கோர்ட்டு வியாச்சியத்தால் இழந்த செல்வத்தையும் ஒருவன் துறந்தவனாகக் கொள்ள வேண்டி வருமென்க. பின், துறவின் முக்கிய லக்ஷணம் யாதெனின்,

"எந்நாளுடலமசைகின்ற தெதுதான் பிறவிக்கருமத்தின்
வித்தாய் நின்றததுவிட்டால் வேந்தா வெல்லாம்விட்டனவாம்".

(இதன் பொருள்:— யாதினாற் சரீரம், சஞ்சரிக்கின்றதோ யாதொன்று ஜன்னத்திற்கும் கருமத்திற்கும் விதையாயிருந்ததோ, அதனை விடுவையாயின் அரசனே! சகலத்தியாகமாம்) என்று ஞானவாசிட்டத்திற் கூறியிருக்குமாறு பவக் கன்மங்களுக்கு வித்தாய் மரத்தை யசைக்கின்ற வாயுவைப்போல சரீரத்தை யாட்டுவிக்கும் மனதை விட்டு விடுவதேயாம். இஃது மெய்ஞ்ஞானத்தாலன்றிச் சித்திக்காததால் அது பூர்த்தியடையும்பொழுதே துறவும் பூர்த்தியடைகின்றது. உலக விஷயங்களில் உண்டாகும் வெறுப்பால் ஒருவன் பிரதமத்தில் புறப்பற்றுக்களை யொழிக்கிறான். அவ்வெறுப்புக்கேது அஞ்ஞானமேயன்றி மெய்ஞ்ஞானமன்று. என்னை? அது பொருளல்லவற்றைப் பொருளாகக்கொண்டதினின்றும் எழுந்ததாகலின். அன்றியும் எப்பதார்த்தத்திலேனும் ஒருவனுக்கு வெறுப்புளதால் அதனை அவன் துறந்தவனாகக் கொள்ளுதல் தவறு. அப்பதார்த்தத்தில் விருப்புடையோனுக்கும் அதற்கும் எத்தனை சம்பந்தம் உளதோ அத்தனை இவனுக்கும் அதற்கும் உளவே உளது. வெறுப்பும் விருப்பும் உயிர்களை விஷயங்களோடு டந்திக்கும் வலியில் ஒரே தன்மையுடையனவாம். பொருளைப் பொருளாகக் கிரகிக்கும் நுண்ணறிவாகிய சட்கத்தாலன்றி மற்றெதனாலும் இவ்விருபாசங்களும் சேதிக்கப்படத்தக்கனவல்ல. இந்நுண்ணறிவுடையோர் மெய்ஞ்ஞானிகளே யாதலின் துறவின் முக்கிய லக்ஷணமும் மெய்ஞ்ஞானிகளிடத்ததேயாம். ஆகவே மெய்ஞ்ஞானிகளின் லக்ஷணமே துறவின் முக்கிய லக்ஷணமாகின்றது.

"இல்லறம் பொருளென இருந்து காமிய
அல்லல்சேர் வாழ்க்கையின் அமிழ்ந்து நிற்பினும்
எல்லையில் ஞானஇன் பத்தை யெய்தியே
புல்லியும் புல்லிடா திருப்பர் புண்ணியோர்".

என்றார் சிவஞானவள்ளலார். ஆதலின் எப்பொருள்களுக்கு மத்தியிலிருப்பினும், எத்தகைய பிரவர்த்தி செய்து வரினும் அவற்றில் விருப்பு வெறுப்பின்றி அஃதாவது பற்றுதல் விடுதலின்றித் தாம் செய்யவேண்டியதாய் நேரிடும் கடமைகளைச் சற்றும் வழுவாது சரியான விதத்திற் செய்துவருவர் ஞானிகளெனப்படுவோர். சாதாரண ஜனங்கள் அவரை யுணரார். அஃதோர் ஆச்சரியமுமன்று. எதனாலெனின், அவர்க்கு நுட்ப அறிவு இன்றாதலினென்க. ஆயினும் எவரும் எளிதிலுணருமாறு ஞானிகளுக் கின்றியமையா லக்ஷணத்தைக் கூறுவாம். அஃதாவது:—இராகத்துவேஷம் அற்றிருத்தலாம்; இவ்லக்ஷணம் உடையாரலர் எத்தனை பெரியோராய்த் தோன்றினும் அவரை ஞானியென்றெனக் கூசாது கூறலாம். இராகத்துவேஷங்களை யாதாரமாக வைத்து ஞானிகளைக் கணிக்கவேண்டியிருத்தலின் அவற்றைப்பற்றிய உண்மையான அறிவு எவரிடத்துமிருக்க வேண்டுவதாவசியகம். அவைகளைணித்த லெற்றுக்கெனின், அவரது தன்மையை உணர்தலினால் அவரையடுத்து மெய்வழி நாடி உய்கிலை யடைதற் கேதுவாயிருத்தல் பற்றியென்க. இராகம் எனினும் விருப்பு, இச்சை எனினும் ஒக்கும். துவேஷமெனினும் வெறுப்பெனினும் பொருந்தும். ஒருவனை ஓர்பொருளினிடத்தில் இச்சையுடையானெனக்கூற வேண்டுமாயின் அவனுடைய இந்திரியங்களுக்கோ, மனதிற்கோ அப்பொருள்பிரத்தியக்ஷமாகுங்கா லெல்லாம் அதனை யடையவேண்டும் என்னும்அவாவும், அதையநுசரித்துப் பிரவர்த்தியும், அப்பிரவர்த்தியால் பொருள் சித்திக்கவில்லையாயின் ஆறாத்

துக்கமும் உண்டாதல் வேண்டும் இவற்றில் கடையதின்றாயின் இச்சையாகாது. ஒரு பொருளை யடையவேண்டுமென்னும் அவாவும் அதற்காம் பிரவர்த்தியுமிருந்தும் சித்திக்காதவிடத்துத் துக்கமில்லாதிருத்தல் சயசயம் துறந்த மெய்ஞ்ஞானிக்கே கூடும். அன்றியும் எவரும் துக்கநிவிர்த்திக்காகவே சகல பிரவர்த்திகளையும் செய்கின்றாரேயன்றி மற்றெதற்காகவுமன்று. ஆதலின் துக்கத்தைக் கொடுக்காத இச்சை இச்சையாகாது. ஸ்ரீவிவேகாநந்தசுவாமிகள் பிரசங்க காலங்களிற் சில விடங்களில் பட்டவஸ்திரத்தால் தைக்கப்பட்ட அங்கரக்ஷையைத் தரித்துக் கொண்டிருந்ததினால் அவரைப் பற்றுடையார் போன்று குறிப்பித்து அவரிடத்தில் துறவியின் லக்ஷணம் இன்றெனச் சில கிறிஸ்தவர்கள் எழுதியிருந்ததைப் பலரும் பார்த்திருக்கக்கூடும். அது முற்றிலும் தவறான அபிப்பிராயமென்று யாம் மேல் விவரித்த விஷயங்களால் நன்றாய் விளங்குமென நம்புகின்றோம். இதுபோலுள்ள விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு, கிறிஸ்தவர்கள் மாத்திரமன்று ஏனைய மதஸ்தர்களும் ஞானிகளையுணர முயற்சிக்கின்றார்கள். அது எங்ஙனம் கூடும்? இதுமுதலேனும் இச்சையின் லக்ஷணத்தை நன்குணர்ந்து கொள்வாராக. இதுபோலவே த்வேஷமும் கிரகிக்கத்தக்கது. ஒருவனை ஒருபொருளில் வெறுப்புடையானெனக் கூறவேண்டுமாயின், அவனுடைய இந்திரியங்களுக்கோ மனதிற்கோ அப்பொருள் பிரத்தியக்ஷ மாகுங்காலெல்லாம் அதன் கெடுதியில் விருப்பமும், அதனைப் பலிப்பிப்பதற்குரிய பிரவர்த்தியும், அப்பிரவர்த்தியின் முடிவு பிரதிகூலமாயிருப்பின் துக்கமும் உண்டாதல் வேண்டும். இவற்றிலும் கடையதின்றாயின் த்வேஷமாகாது ஒருபொருளைக் கெடுக்க விருப்பமும் அவ்விருப்பத்தைத் நிறைவேற்றுதற்குரிய பிரவர்த்தியுமிருந்தும் அஃது பலிக்காதவிடத்துத் துக்கமில்லாதிருத்தல் பொது நன்மையின் பொருட்டுத் தனது கடமையைச்செய்து முடிக்க வேண்டுமென்னும் எண்ணமுடைய ஞானிக்கே பொருந்தும். அன்றியும் இந்நிலையில் எவரும் அவாவும் துக்கநிவிர்த்தியும் சித்தித்திருக்கின்றது. ஆதலின் துக்கத்தைக் கொடுக்காத த்வேஷமும் த்வேஷமாகாது. இவ்விராகத்வேஷங்கள் மனோநிலையைச் சார்ந்தனவாகலின், தோற்றத்தை வைத்து நிதானிக்கலாகாது. நிதானிக்கலாமெனின் தனது புத்திரி விளையாடிக்கொண்டிருக்கும் பாவையின்மேல் பிரியம்வைத்தான்போல் தனக்குவேண்டுமெனக் கேட்டிரங்கும் தகப்பனை அப்பாவையின்மேல் விருப்பமுடையானெனவும், தனது சகோதரன் தீயவொழுக்கத்திற் செல்லுதலினால் அவன்மேற் கோபங்கொண்டு அவனைக் கடிக்கும் தமையனை சகோதரன்மேல் த்வேஷமுடையானெனவும் கூறவேண்டிவருமெங்க. உண்மை இங்ஙன மிருத்தலின், துறவிகளை யுணர்தல் அவரது மனோநிலைமையின் தன்மையை மிக்க நுண்ணிய விவேகத்தால் கிரகித்தலினின்றேயாம்.

இதுவரை யாம் கூறிவந்ததினின்றும் துறவின் முக்கிய லக்ஷணம் இராகத்துவேஷங்களை விட்டிருத்தலே யாமென்பது இனிது விளங்கும். மனதைத் துறத்தலென்பதும் இஃதேயாம். இந்நிலை யொன்றே பேரானந்தத்தை யளிக்கவல்லது. இதனை யறியாது மாந்தர் விஷயங்களினின்றும் சுகம் அடையலாமெனக் கருதி அந்தோ! விளக்கொளியைத் தேடிச் செல்லும் விட்டிலாய்த் திரிகின்றனரே! என்னபேதமை! அவற்றை யெல்லாம் துச்சமெனத் தள்ளி இனியாகிலும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

பத்திராதிபர்.

SREE BHAGAVAT GITA KUMMI.

ஸ்ரீ

பகவத் கீதைக்கும்மி.

சஞ்சயன்சொன்னது.

12 என்றபோ ரன்களி கூறக் குருகுலத்
தியாவர்க்கு மூத்தோர் பகைவரஞ்சும்
வன்றிறல் வீமேர் சிங்கநா தஞ்செய்து
வண்சங்க நாத முழக்கினரே.

(இ—ள்) என்று சொல்லிய தன் பெயரன் (துரியோதனன் விசனக்குறிப்பை அறிந்து தன் பலம் குறைய வில்லை யென்று அவன் தெரிந்து) சந்தோஷப்படும்படி கருதி குரு குல சேட்டனும் சத்துரு பயங்கரரும் திண்ணியபலசாலியுமான பீஷ்மர் (வீராவேசங்கொண்டு சிங்கங்கர்ச்சிப்பது போலக் கர்ச்சித்துச் சங்கத்தொனி செய்தார்.

குறிப்பு—களிகூற—சந்தோஷம் அதிகமாக; வன்றிறல்—உறுதியான பலத்தை யுடைய; வண்சங்கு—வளமான சங்கு

13 முழக்கிட வேறுசங் கங்களும் பேரி
முரசு பறைகளும் கொம்புகளும்
முழக்கிடப் பட்டன அம்முழக் கம்விண்ணும்
முட்டிட எங்கணும் எட்டினதே.

(இ—ள்) (அவ்வாறு சேனாபதியாகிய பீஷ்மர் சங்கை) முழக்கவே (அவரைச்சேர்ந்தவர்கள் எல்லாரும் அவர் உற்சாகத்தைக் கண்டு தாங்களும் உற்சாகங்கொண்டதை விளக்கும்படி தங்கள் தங்கள்) சங்குகளையும், பேரிகள், முரசுகள், பறைகள், கொம்புகள், இவ்வாத்தியங்களையும் முழக்கினார்கள். அந்த முழக்கம் எங்கும் பரவியது.

குறிப்பு—வேறுசங்கங்கள்—முன்கூறிய பீஷ்மர்சங்கம் அல்லாத மற்றையோர் சங்கங்கள்; எங்கணும்—எங்கும்.

14 அவ்வள வில்வெண் குதிரைகள் பூண்டுயர்
வாயுள தேரில் அமர்ந்திருந்த
செவ்விய கண்ண பிரானும் கிரீடியும்
திவ்வியசங் கந்தொனி செய்தனரே.

(இ—ள்) அந்த முழக்கங்கேட்ட சமையத்தில் வெள்ளைக்குதிரைகள் பூட்டப்பட்ட உயர்வான தேரிலேயிருந்த கண்ணபிரானும் அருச்சுனனும் தங்களுடைய தெய்வத்தன்மை பொருந்திய சங்குகளை முழக்கினார்கள்.

குறிப்பு—அவ்வளவில்—அந்தச் சமையத்தில். செவ்விய—அழகுள்ள. கிரீடி—அருச்சுனன். திவ்ய—தெய்வத்தன்மைபொருந்திய

வியாக்கியானம்—எதிர்ப்பக்கத்து முழக்கத்தைக் கேட்டவுடனே தங்கள் சேனை (தைரியத்தை யிழக்காமல்) உற்சாகப்படும்படி கண்ணபிரானும் அருச்சுனனும் சங்க முழக்கஞ் செய்தார்கள். எதிர்ப்பக்கத்தாரது முழக்கம் ஒருவாறு அறைகூவுதல் (போருக்கழைத்தல்) போலிருந்ததனால் தாங்கள் போர்செய்யச் சித்தமாயிருப்பதைக் காட்டக் கண்ணபிரானும் கிரீடியும் எதிர் முழக்கஞ் செய்தார்கள் என்றும் பொருந்தும்.

கௌரவ சேனாதிபதியாகிய பீஷ்மர் முதலில் சங்கத்தொனி செய்தது போல, பாண்டவ சேனாதிபதியாகிய வீமன் முதலிற் சங்கத்தொனி செய்யாமல் கண்ணபிரான் அவ்வாறு செய்தது என்னையோ வெனின், எதிரிகளது முழக்கத்தைக் கேட்டபோது தான் சங்கத்தொனிசெய்து தன் சேனையை உற்சாகப்படுத்த வேண்டுமென்று வீமன் அறியுமுன்னாக, கண்ணபிரான் தமது அதிசூக்ஷ்ம புத்தியால் அறிந்து சங்கத்தொனி செய்தார் என்க. முதலில் அவர் சங்கத்தொனி செய்தார் என்பதும் உடனே பக்கத்திலிருந்த அருச்சுனன் செய்தானென்பதும் விளங்க "கண்ணபிரானும் கிரீடியும்" என்று கண்ணபிரான் முதலாகக் கூறப் பட்டிருக்கிறார். இவர்களிருவரும் சங்கநாதஞ் செய்யவே தான் சேனாதிபதி யாதலால் துவக்கத்தில் சங்கத்தொனி செய்யற்பாலனான வீமனும், அவன்பின் பாண்டவர் தலைவனாதலால் பிரதமஸ்தானத்திற் குரிய தருமரும், அவர்பின் நகுல சகாதேவரும் மற்றைய அரசரும் வரிசையாக, தங்கள் தங்கள் சங்கங்களைத் தனித்தனியே ஊதினார்கள் என்பது பின்வருங் கவிகளால் விளங்கும். கௌரவ சேனையின் முழக்கம் ஏககாலத்தில் செய்ததாக குறிப்பித்து பாண்டவ சேனா வீரரது முழக்கந் தனித்தனியாகச் செய்யப்பட்டது என்று கூறியது முந்திய சமூக முழக்கத்துக்குப் பிந்திய தனித்தனி முழக்கங்கள் ஒவ்வொன்றுமே ஒப்பாம் அல்லது உயர்வா மென்பது தோன்றற்குப் போலும்.

15 தயங்கிடும் பாஞ்சசந் யத்தைமா லுந்தேவ
தத்தத்தைப் பார்த்தனும் தாமுழக்கப்
பயங்கர க்ருத்தியனும் வீமனும் தன்பெரும்
பாரப் பவுண்டரம் பூரித்தனனே.

(இ—ள்) கண்ணபிரான் பாஞ்சசந்ய மென்ற சங்கையும் அருச்சுனன் தேவதத்தம் என்னும் சங்கையும் வீமன் பவுண்டரம் என்ற சங்கையும் ஊதினார்கள்.

குறிப்பு—தயங்கிடும்—பிரகாசிக்கும்.

மால்—கண்ணபிரான். பார்த்தன்—அருச்சுனன். பயங்கரக்ருத்தியனும் வீமன்—(பகாசுரனுக்காக அனுப்பப்பட்ட அபாரமான உணவுத் திரளையுண்டு அவ்வசுரனைக் கொன்றது முதலிய) பயமுண்டாக்குங் காரியங்களைச் செய்தவனாகிய வீமன்.

16 அரசன் குந்தி குமாரனும் தர்மன்
அனந்த விஜய மெனுஞ் சங்கை
வரநகு லன்சுகோ ஷத்தைச் சாதேவன்
மணிபுஷ்ப கத்தைவாய் வைத்தூதினர்.

(இ—ள்) ராஜாவும் குந்திதேவி குமாரரும் ஆகிய தருமர் அனந்தவிஜய மென்ற சங்கையும், நகுலன் சுகோஷமென்ற சங்கையும் சகாதேவன் மணி புஷ்பகமென்ற சங்கையும் ஊதினார்கள்.

குறிப்பு—வரநகுலன்—மேன்மையுள்ள நகுலன்.

வியாக்கியானம்—இவ்வத்தியாயம் (2)ம் கவியில் துரியோதனனை ராசன் என்று விசேடித்துக் கூறினது போல் இங்கே தருமராசனை அரசன் என்று சிறப்பித்துக் கூறினர்.

17 வில்லிற் சிறந்திட்ட வில்லாளி யாங்காசி
வேந்தனு மாரத னுஞ்சி கண்டி

வெல்வொணுச் சாத்தகி யுந்திட்டத் துய்மனும்
விராட்டே சத்துக் கிராசனுமே.

18 துருபத வேந்தன் திரௌபதை மைந்தர்
சுபத்திரை தோன்றலெனுந் திண்டோள்
தருண அபிமன்னும் ஆனோர் தனித்தனி
தத்தஞ்சங் கத்தை முழக்கினரே.

(இ—ள்) காசிராசன், சிகண்டி, சாத்தகி, திருஷ்டத்தும் நன், விராடராசன், துருபதராசன், பிரதி விந்தியன் முதலிய திரௌபதை புத்திரர்கள் அபிமந்யு ஆகிய இவர்க ளெல்லாரும் தனித்தனியாகத் தங்கள் சங்கங்களை ஊதினார்கள்.

குறிப்பு—வெல்வொணு—செயிக்கக்கூடாத; வேந்தன்—அரசன்; மைந்தர்—புத்திரர்; தோன்றல்—மகன்; திண்டோள் தருண அபிமன்—வலியதோள்களையும் இளமையையும் உடைய அபிமந்யு.

19 அம்முழக் கெங்கணுஞ் சென்றிந்தப் பூமியோ
டாகாயந் தானும் எதிரொலிக்க
விம்மிச் சுயோதன னாதிய ரானோர்
வெருவிட நெஞ்சுருவியதே.

(இ—ள்) அப்படி முழக்கிய சங்கத்தொனி எங்கும் பரவிப் பூமியும் வானமும் எதிரொலி செய்யும்படியாக முழங்கித் துரியோதனன் முதலியோர் பயம் அடையும்படி அவர்கள் நெஞ்சுருவியது.

குறிப்பு—எங்கணும்—எவ்விடத்தும்; விம்மி—ஒலித்து. கிருஷ்ணார்ச்சுனர் முதலியோர் சங்குகளொவ்வொன்றின் முழக்கமும் துரியோதனாதியோர் நெஞ்சுருவிய தென்றுபொருள் கொள்ளலாம். தருமபுத்திரர் முதலினோர் பீஷ்மர் முதலானவர்கள் சங்கத்தொனியால் வெருவினதாகக் கூறாது துரியோதனாதியோர் கிருஷ்ணார்ச்சுனர்களின் சங்கு முழக்கங்கேட்டு வெருவியதாகக்கூறியது இவர்கள் தோல்வியடைவார்களென்பதைக் குறிப்பித்தற்குப் போலும்.

20 பின்பா யுதப்பிர யோகஞ் செய்கின்ற
பிரதமத்தே அநுமத்துவசன்
தென்பாண்டு செய்போர்க்குச் சித்தமாய் நின்றஅத்
தெவ்வரை நோக்கிக்கை வில்லெடுத்தே.

(இ—ள்) பின்பு ஆயுதம் வழங்கத் தொடங்கியபோது அநுமக்கொடியோனும் பாண்டு ராஜபுத்திரனுமான அருச்சுனன், போர்செய்யச் சித்தமாயிருந்த பகைவர்களைப் பார்த்து வில்லையுயரவெடுத்து.

21 இருஷீ கேச னெனுங் கண்ணற் கிவ்வணம்
இங்கித வார்த்தை இயம்பலுற்றான்
இருபெருஞ் சேனை நட்டநடாக வென்றன்
இரதத்தைப் போய்நின் றிடச்செய்குவீர்.

22 இத்தகு போரிலென் னோடெதிர்ந் தேயமர்
எற்றிடச் சித்தமா யிங்குவந்தோர்
யுத்த விருப்பின ராகவே நிற்குமிவ்
வூகத் தவரை நோக்கிடவும்.

23 திருதராட்டிரன் தீமதிப் புத்திரனு
சிந்தைக் குகவை செயக்கருதிப்
பொருதிட ஆயத்த மாகித்திரண்ட அப்
போர்ப்படை வீரரைப் பார்க்கவுமே.

(இ—ள்) கண்ணபிரானை நோக்கி இந்த யுத்தத்திலே என் பக்கலிலேநின்று போர் புரிவதற்குச் சித்தமாகி இங்கே வந்திருக்கின்ற இந்தப் பாண்டவ சேனையையும் திருதராட்டிரனது புத்திரனும் துர்ப்புத்தியுள்ள துரியோதனனுக்குச் சந்தோஷமுண்டாகும்படி கருதிச் சண்டை செய்வதற்கு ஆயத்தமாகித் திரண்டு நிற்கின்ற அந்தக் கௌரவ சேனையையும் நான் பார்க்கும்பொருட்டு அவ்விரண்டு பெரியசேனைகளுக்கும் மத்தியிலே என் தேரைச்செலுத்தி நிறுத்துவீராக.

சஞ்சயன் சொன்னது.

24 என்றுறக் கத்தைவென் றிட்டவிஜயன்
இசைத்திடக் கேட்ட இறையவன் தேர்
ஒன்றும்ஒவ்வாமல் உயர்வுற்ற தேரை
உபயசே னைகட்கும் ஊடாக,

25 வீஷ்ம ருக்கும் துரோண ருக்கும்பிற
வேந்தருக் குமெதி ரேநிறுத்திக்
கூடியிருக்குங் குருக்களைப்பார்த்தனை
கொண்டபோ ராயென விண்டனனே

(இ—ள்) நித்திரையைச் செயித்த அருச்சுனன் இவ்வாறு சொல்லக்கேட்ட கண்ணபிரான் எந்தத் தேரும் ஒப்பாகாமல் உயர்ந்துள்ள தேரை இரண்டு சேனைகளுக்கும் இடையிலே பீஷ்ம துரோணருக்கும் மற்றெல்லா அரசர்களுக்கும் எதிரிலே நிறுத்தி ஏ! அர்ச்சுனா! ஒன்று கூடியிருக்கிற இந்தக் கௌரவசேனைகளைப் பார்ப்பாயாக என்று சொன்னார்.

குறிப்பு:—பிற—மற்ற. குருக்கள்—கௌரவர், துரியோதனாதியர். விண்டனன்—சொன்னான்

V. P. சுப்பிரமணியமுதலியார்.

வாழ்க்கையிலுண்டான என் அனுபவங்களிலிருந்து ஓர் விஷயத்தை நிச்சயிக்கிறேன். அதாவது:—நாம் அறிந்தவற்றுளெல்லாம் மேலான சுகம் மற்றவர்களுக்கு சுகத்தையுண்டுபண்ண நாம் செய்யும் முயற்சியிலிருந்தும் சுயநயம்துறத்தலிலிருந்தும் உண்டாகின்றதேயன்றி ஆசையினால் உண்டாவதேயில்லை—O' Reelly.

***

ஜலம் பாலத்தின் கீழாக ஓடுகின்றது; ஆனால் அவ்விடத்தில் நின்று விடுவதில்லை. அதுபோலவே பந்தமற்றோர் கைவழியாய் பணம் செல்கின்றது. ஆனால் அதையொருபோதும் அவர்கள் சேர்த்து வைப்பதில்லை—ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

—Sree Ramakrishna.

THE TRUTH OF THE VEDANTA AND THE SIDDHANTA PHILOSOPHIES.

வேதாந்தசித்தாந்தங்களினுண்மை.

(முன் தொடர்ச்சி)

இவற்றுள் முன்னர் பாச, பசு ஞானங்களை நிர்ணயித்துப் பின்னர் பதிஞானத்தை நிர்ணயிப்பாம்.

பாச ஞானமாவது பாச சம்பந்தமான அறிவு. அதாவது வேதங்களும், சாஸ்திரங்களும், மிருதிகளும், புராணங்களும், மந்திரக் கலைஞானங்களும், ஆசையுமாகிய சொற்பிரபஞ்சம், நிலமுதல் நாதமீறாகிய பொருட்பிரபஞ்சம் இவைபற்றி நிகழும் ஏகதேச ஞானம் அனைத்துமாம். இவைகளும் இவைகளைக் கொண்டறியும் மனமும் பாசவடிவாதலின் இவைபற்றி நிகழும் ஞானம் பாசஞானமாமென்க.

அங்ஙனமாக வைகரியாதித் திறமெல்லாம் "பாசஞான" மெனக்கழிப்பின் வைகரியாதித் திறத்துட்பட்ட ஞானநூல்தனை ஓதலோதுவித்தல் முதலியன ஞானபூசை யெனக்கூறுவது போலியாய் முடியுமெனின், பதிஞானம் விளங்குதற்கு ஏதுவாமுகத்தாற் பயன்படுதலுடைமையின் அதுபோலியாய் முடியாதென்க.

இனி பசு ஞானமாவது ஜீவசம்பந்தமான அறிவு. அதாவது பாச ஞானத்துக்கு முன்னிலையாயுள்ள வேதாதிகளைப் பொருந்திய ஆன்மா, இவை யனைத்தும் நன்றும் வியாப்பியமென்றறிந்து நீக்கித் தான் அவற்றிற்கு மேற்பட்டு, அங்ஙன மேற்பட்டதை பற்றி நிற்பதோர் செருக்காய் அனாதிமுத்தனைப்போல முத்தனெனியாலும் அ. வா து பிரம (சிவ) மாமேயெனச் சடுதியின் மதிக்க வருவதோர் கேவலமாகத ஞானமாம்.

அற்றேல், அறிந்து நீக்குதலின் வேற்றுமை யின்மையிற் பசுவைச் சமஷ்டிரூபமென்றற் கிழுக்கென்னை யெனின், இவ்வான்மா தூல, சூக்கும பூதங்களாற் கட்டுண்டு, ஞானேந்திரியங்களால் உணர்த்த உணர்ந்தும், ஒவ்வோரிந்திரியங்களினும் ஒவ்வொரு விடயங்களை யுணர்ந்தும் இடையே வேறுதலான் அப்பசு ஆதி முத்தனும். சிவன் ஒருவனுணர்த்த உணர்தலின்றித் தானே முழுதும் அறிந்தமையகறிந்து அனாதியே நீங்கிய அனாதி முத்தனும். இவ்வேறுபாட்டினும் 'பசு' சமஷ்டிரூப மென்றல் இழுக்காமென்க. சித்தியார்,

"வேதசாஸ்திர மிருதி புராணகலைஞானம் விந்தம்பசபை வைகரியாதித் திறங்கண்மேலா நாதமுடியான வெல்லாம் பாசஞானம் நணுகியான்மாவி வையிழ் நாடலோடும் காதலினால் நான் பிரமமென்று ஞானம் கருது பசுஞான மிகவுடலிற் கட்டுண்டோதி யுணர்ந்தொன்றொன்றா யுணர்ந்திடலாற் பசுவா, டொன்றுசெச் சிவனியல்பினுணர்ந்திட்டு ... பேதமற ..." என அருணந்தி சிவாசாரியார் கூறிய வாறு காண்க.

அங்ஙனமாயின் தேகேந்திரியாதிகளை யான் எனது எனக்கருதியிருந்த ஆன்மா அவைகளை நீக்கித் தற்றெரிசனமும், சிவோகம்பாவனையும் கூறுவது போலியாய் முடியுமெனின், பதிஞானம் விளங்குதற்கு ஏதுவாமுகத்தால் இப்பசு

மனுவா லர்ச்சனைசெய்து அத்திருமந்திரத்தானே குண்டலித்தான மான உந்தியில் ஞான வனலை யெழுப்பி அதக்கண் விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழு முனை நாடி, இடைநாடி யாகிய சருக்கு சுருவங்களா ஹோமஞ்செய்து விந்துத்தான மாகிய புருவநடுவில் சிகர, யகர, வகரவகன் மூன்றும் முறையே தற்பதப்பொருளும், துவம்பதப்பொருளும், அசிபதப்பொருளுமா முறைமைநோக்கி யதனுற் சிவோகம்பா வனை செய்வதேயாம். இதனை,

'அஞ்செழுத்தாலுள்ள மானுடைமை கண்டரனை—அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்—குண்டலியிற் செய்தோமமோ தண்டஞ்சானிகதி—வண் டனுஞ் சேடனுமங்கு" என்னுஞ் சிவஞானபோதத்திரு வெண்பா வாற்காண்க.

இது காறும் பஞ்சாக்கரமு மதனைத் தியானிக்கும் விதியும பஞ்சாக்கரத்தியானம் தேகேந்திரியாதி விடயப்பற்று நீக்கல், பதிஞானம் இம்மூன்றும் முத்தி யடைதற்கு முக்கிய சாதனங்களெனவும சரியை, கிரியை, யோகமுதிர்ச்சி யானே அவைகள் வரவேண்டு மெனவும் நிர்ணயிக்கப்பட்டது. இன்னும் விரிக்கிற் பெருகுமாதலின் இதனை இம்மட்டோடு நிறுத்தி இனி வேதாந்த சித்தாந்தங்களில் கூறப்பட்ட முத்தி யைப் பற்றிவிசாரிப்பாம். (இன்னும் வரும்.)

பொ. மு. முத்தையபிள்ளை.

THE FORCE OF WORLDLY ATTACHMENT.

பாசபலம்.

(227-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்னரும் அவ்யோகி அவன்வசனங்களுக் கிணங்கிச்சிறிதுகாலம் கழித்து வருவதாக மொழிந்துபோயினர்.

அக்கெடுவும் கைகொடிப்பொழுதாய் பறந்துவிட முனிவரர் பழையகுடிசை யை நோக்கிச் சென்றபோது ஆங்கக் குடிசையைக் காணாது அதற்குப்பதிலாக இர ண்டு சிறிய குடிசைகளிருக்கக் கண்டு வியப்புற்று சமீபத்திலுள்ளாரை வினவினர். அவர்கள் பழைய குடிசை யிலிருந்த சோதரர்கள் இருவரும் மனோவேறுபாட்டினால் சச்சரவு செய்துகொண்டு வெவ்வேறு குடில்களில் தங்கள் தயைகள் பெண்டுபிள்ளை களுடன் வெகு கஷ்ட தசையில் இருக்கிறார்களென்றும் பழைய வீடு இடிந்து தரை யோடு தரையாய்ப் போய் விட்டதென்றும் சொன்னார்கள்.

பிறகு அம்முனிவர் மெதுவாய் ஒவ்வொரு குடிசையிலும் பார்த்த பொழுது அப்பரவனைக் காணாததால் தமது யோகக் கண்ணால் நோக்க, சுணங்க னாயிருந்த ஜெல் வா வாலா சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்த நாளில் செலவுக்குப்போக மீந்து பெட்டி யறையில் புதைக்கப் பட்டிருந்த பணத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் ஒருபாம்பாகச் சமீபத்திலுள்ள புதரொன்றில் வசிப்பதாயறிந்தார். அச்சமயத்திலிரண்டு பிராதாக்களும் ஏதோ ஒரு அற்பமனஸ்தாபத்தை முன்னிட்டு வெளியே வந்தார் கள். சாதுவைத் தெருவில் பார்த்தவுடன் தம்பி தமையனை நோக்கி "ஹே! அண்ணா! ஆண்டி வேடம்பூண்ட இந்த பாதகனால் தான் நமக்கு இவ்வளவு கஷ்டமும் வந் தது. இவன் நமமுடைய வீட்டிற்கு வரத்தலைப் பட்டநாள்முதல்தான், நமது செல்

மனுவாலர்ச்சனைசெய்து அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான சக்தியிற் றூண வனலை யெழுப்பி அதன்கண் விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழு முனைநாடி, இடைநாடி யாகிய சுருக்கு சுருவங்களால் ஹோமஞ்செய்து விந்துத்தான மாகிய புருவநடுவில் சிகர, யகர, வகரங்கள் மூன்றும் முறையே தற்பதப்பொருளும், துவம்பதப்பொருளும், அசிபதப்பொருளுமா முறைமை நோக்கி யஃதுற் சிவோகம்பா வனை செய்வதேயாம். இதனை,

'அஞ்செழுத்தாலுள்ள மாறுமுடைமை கண்டானை—அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்—குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி—லண் டனுஞ் சேடனுமாந்து" என்னுஞ் சிவஞானபோதத்திரு வெண்பா வாற்றாண்க.

இது காறும் பஞ்சாக்ஷரமு மதனைத் தியானிக்கும் விதியும் பஞ்சாக்ஷரத்தியானம் தேகேந்திரியாதி விடயப்பற்று நீக்கல், பதிஞானம் இம்மூன்றும் முத்தியடைதற்கு முக்கிய சாதனங்களெனவும் சரியை, கிரியை, யோகமுதிர்ச்சி யானே அவைகள் வரவேண்டு மெனவும் நிர்ணயிக்கப்பட்டது. இன்னும் விரிக்கிற் பெருகுமாதலின் இதனை இம்மட்டோடு நிறுத்தி இனி வேதாந்த சித்தாந்தங்களிற் கூறப்பட்ட முத்தி யைப் பற்றிவிசாரிப்பாம். (இன்னும் வரும்)

பொ. மு. முத்தையபிள்ளை.

THE FORCE OF WORLDLY ATTACHMENT.

பாசபலம்.

(227ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்னரும் அய்யோகி அவன்வசனங்களுக் கிணங்கிச்சிறிதுகாலம் கழித்து வருவதாக மொழிந்துபோயினர்.

அங்கேயும் கைநொடிப்பொழுதாய் பறந்துவிட முனிவரர் பழையகுடிசை யை நோக்கிச் சென்றபோது அக் குடிசையைக் காணாது அதற்குப்பதிலாக இர ண்டு சிறிய குடிசைகளிருக்கக் கண்டு வியப்புற்று சமீபத்திலுள்ளாரை வினவினர். அவர்கள் பழைய குடிசையிலிருந்த சோதரர்கள் இருவரும் மனவேற்றுபாட்டினால் சச்சரவு செய்துகொண்டு வெவ்வேறு குடில்களில் தங்கள் தங்கள் பெண்பிள்ளை களுடன் வெகு கஷ்ட தசையில் இருக்கிறார்களென்றும் பழைய வீடு இடிந்து தரை யோடு தரையாய்ப் போய் விட்டதென்றும் சொல்லுகிறார்கள்.

பிறகு அம்முனிவர் மெதுவாய் ஒவ்வொரு குடிசையிலும் பார்த்த பொழுது பசவனைக் காணாததால் தமது யோகக் கண்ணால் நோக்க, சுணங்கனாயிருந்த நாய் வா வாலா சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்த நாளில் செலவுக்குப்போக மீந்து பூமிக் கை யறையில் புதைக்கப் பட்டிருந்த பணத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் ஒருபாம்பாகச் சமீபத்திலுள்ள புதரொன்றில் வசிப்பதாயறிந்தார். அச்சமயத்திலிரண் டு பிராதாக்களும் ஒரே ஒரு அற்பமனஸ்தாபத்தை முன்னிட்டு வெளியே வந்தார் கள். சாலையைத் தெருவில் பார்த்தவுடன் தம்பி தமையனை நோக்கி "ஹேஹே! அண்ணா! ஆண்டி வேடம்பூண்ட இந்த பாதகனால் தான் நமக்கு இ வளவு கஷ்டமும் வந் தது. இவன் நம்முடைய வீட்டிற்கு வரத்தலைப் பட்டநாள்முதல்தான் நமது செல்

வரும் குறைய ஆரம்பித்தது நம் பெற்றோரும் மடிந்தார்கள்" என்று சொல்லிப் பின்பு அச்சித்தயோகியைப் பார்த்து "ஹே! நரகவாசியாகிய சந்நியாசி வேடம்பூண்ட நாடோடி! எங்கள் முன் நில்லாதே; நின்றால் உனக்குக் கெடுதி சம்பவிக்கும்." என்றனர். அம்மொழிகளைக் கேட்ட சாந்தாவதார புருஷனான சித்தர் "தோழர்காள்! நீங்கள் அவ்வளவு தரித்திரராய்ப் போய் விட்டீர்களா! உங்களுக்குப் பொருள்தானே வேண்டும். உங்கள் பெற்றோர் உயிருடனிருந்த காலத்தில் அவர்கள் சயனக் கிரகமாயுபயோகித்துவந்த ஸ்தலத்தைப் போய் இப்போது வெட்டிப்பாருங்கள். அங்கே கிடைக்கிறதை யெடுத்து நீங்களிருவரும் பாதித்துச் சுகித்திருப்பீர்களாக" என்று ஆசிர்வதித்தார்.

இதைக்கேட்ட சகோதரரிருவரும் ஆனந்தசாகரத்தில் மூழ்கினவர்களாய் ஆளுக்கொரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு போய் குறித்த விடத்தில் வெட்டினார்கள் புதைத்து வைத்திருக்கும் பாண்டத்தினருகில் வெட்டு விழுந்தவுடன் அதைக் காத்துக் கொண்டிருந்த சர்ப்பம் அவர்களைச் சீறிவிரட்டிற்று. அவர்கள் உடனே திரும்பினதால் தான் அக்காலசர்ப்பத்தின் விஷத்திற்குத் தப்பிப் பிழைத்தார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்கு வருத்தங்களெல்லாம் அந்த யதீந்திரரே காரணமென்று நினைத்து அவர் சந்தையும் ஒழித்து உயிரையும் வாங்கிவிட உத்தேசித்தார்கள். அதை யறிந்த அப்பரமாத்மா "நான் பொய்சொல்லுகிறேனா? அதோ பித்தளைப் பாத்திரத்தின் விளிம்பு கண்ணுக்குப் புலப்படவில்லையா? உங்களுக்கு வேண்டியதெல்லாம் அதிலிருக்கிறது. அந்த அரவத்தைக் கொன்று விட்டால் எல்லாம் உங்களுடையது தான்" என்று மொழிந்தனர். அம்மொழியைக் கேட்டவுடன் தூரத்திலிருந்துகொண்டு புதர்வழியாய் நோக்கிய பொழுது முனிவர் சொன்னபடி பித்தளைப்பாத்திரத்தின் சின்னம்காணப்பட்டதால் அவர்மேலிருந்த கோபாக்கினியை மாற்றிச் சர்ப்பத்தின் மேல்விட்டு அதைக்கொன்றதின் பின் அவ்விருவரும் பாத்திரத்திற் குள்ளிருந்த நிதியைச் சந்தோஷமாய்ப் பங்கு வைக்க ஆரம்பித்தார்கள்.

அச்சமயத்தில் தயாபரரான முனிவர் முதல் முதல் மனுஷ்யனாகவும் பிறகு உழுவமாடாகவும் அப்பால் கடிநாயாகவும் கடைசியாகப் பாம்பாகவு மிருந்த ஆத்மாவைத் தமது வளர்ந்த ஜடாபாரத்தில் மறைத்துக்கொண்டு அடர்ந்த அடவியிலுள்ள தமது ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் அடுத்தபதியை யாளும் ராஜ தம்பதிகள் தங்கள் பரிவாரத்துடன் யோகீசுவரர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். முனிவரைக் கண்டவுடன் அவர் ஆனந்த பரவசராகி அவரை நமஸ்கரித்துத் தங்களுக்குப் "புத்" என்னும் நரகமில்லாம லிருக்கும்படி ஆசிர்வதிக்கப் பிரார்த்தித்தனர். தமது ஜடையிலிருக்கும் ஆத்மா உலகப்பற்றதிகம் உடையதாதலால் அதனை போகத்திலிருத்த நினைத்துத் தம்பதிகளை நோக்கி "அப்படியே புத்திர சந்தானமுண்டாகுக" என்று ஆசிர்வதித்து 'அப்புத்திரன் அதிசுந்தரமாயும் புத்திசாலியாயும் அடக்க முள்ளவனும், தெய்வபக்தியுள்ளவனும் அன்புள்ளவனுமிருந்து பதினாறு வயது வந்தவுடன் இவ்வுலகவாழ்க்கையைவிட்டு விண்ணுலகம் ஏகுவான்" என்று பகர்ந்தனர்.

தம்பதிகளோ.

அரியது கேட்கில் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு

னுமிருக்கின்றனர். ஆதலின், நானவர்களை யுமக்கு எப்படி காட்டல் கூடும்?" என சிவநாராயணர் "அவர்களுள், ஒவ்வொருவரும் தத்தம் அகமூர்த்தரெனில், இவ்வண்டத்து சராசரப்பொருள்களின் தொழில் நடத்துவோர் யாவர்? உமக்குள், கடவுள், இலரென்றால் உம்முடைய நற்கரும துர்க்கருமங்களையும், உமது சுக துக்கங்களையு மறிந்து உமது வருத்தங்களை அவர் களைவதெவ்வனம்?" என்றார்.

பண்டிதர் "நம்மிடத்திறு மவர்மோனமாயுறைகின்றார் ஆனால் காசிநகரிலோ வென்றால், எல்லோருக்கும் புலப்படும்படி யிருக்கிறார்" என்ன, சுவாமிகள் "காசி யென்பது என்ன வஸ்து? சிவன், எக்கோலத்தோடு ஆங்குறைகின்றார். மண்ணாகவோ, கல்லாகவோ, மரமாகவோ. அல்லால் மானிட ரூபமாகவோ? மனித ரூபமெனின், நீரவனைக் காட்டல் கூடும். கல், மண் எனின், அவரெங்குமுளார், எனெனின், கல், மண், இவைகளில்லாத விடமுளதோ? இம்மட்டோவெனின் அவ்வஸ்துக்கள் நெருப்பாலழிதல் கூடும் ஆனதுபற்றி சிவனுமெரியுமென்று சொல்லவோ! அக்கடவுளும் தேவதைகளும் பஞ்சபூதங்களாகவும் சந்திர சூரிய ராகவுமே யிருக்கிறார்களெனின், அவர்களை ஊர் ஊராய்ச் சென்று ஏன் தேடவேண்டும்? ஆனதால் ஐயா! உம்மைத் தொழில் நடத்தும் பொருளாகிய கடவுளை உள்ளபடி யறியும். அவரே சத்துவம், ரஜஸ், தமஸ், என்ற மூக்குணங்களுக்குங்காரணகர்த்தா. அரூபியாயினும், ரூபியானவர்; விளக்கம் பொருந்தியவர். அவர்தானே, பிரம்மா வென்றும் விஷ்ணு வென்றுஞ்சிவன் என்றும் மனிதர்களாற் கற்பிக்கப்பட்டு அவ்வப்பெயர்களாலழைக்கப்படுகிறார். உம்முடைய குற்றங்களைப்பொறுத்து, இன்பக்கடலுளும்மை வைப்பவர் அவரே. இனிமேலாயினுமிதை யறிந்து, உம்மையும் மற்றோர்களையும் தவறானவழியிற் செலுத்தாமலிருப்பீராக" என்று தெளிவுறச் சொன்னார்.

அப்பால் பண்டிதர் சென்று அரசனுக்குக் கூறிய தின்னதென்று தெரியாது. ஆனால் சிவநாராயணருடைய வார்த்தைகளைப் பிரஜைகளெல்லாங் கேட்டு நடக்கும் பக்ஷத்தில் அவர்களெல்லார் தத்தம் கடமை, தொழில், முதலியன செய்வதினின்றும் நீங்கி விடுவாரென்ற பயம் அரசனுக்கிருந்திருக்கு மென்பது திண்ணம். பிறகு, வாயிற்காப்போனொருவன்வந்து சுவாமிகளை அவ்விடம் விட்டுப்போகும்படி சொன்னான். அவர் அன்றிரவு மாத்திரம் தங்க இடங்கேட்டும் அக்காப்பாளன் அவரை வெருட்டிவிரட்டினான் அவரிரண்டு நாள் அன்ன ஆகாரமில்லாதிருந்தும் அரசனாவது அவனுடைய சேவகர்களில்யாராவது அவர் அன்னம் அருந்தினரா வென்றேனும் நீர் பருகினரா வென்றேனும் கேட்டாரில்லை.

(இன்னும் வரும்.)

C. P. சுப்பையாபிள்ளை. B. A.

பணம் யாருக்கு வேலைக்காரனாக இருக்கின்றதோ அவனே எதார்த்த மனுஷ்யன். பணத்தைச் செலவுசெய்யும் வழியறியாதார் மனுஷ்யர் என்றழைக்கத் தகுதியில்லாதவ ராகின்றனர். —ஸ்ரீ இராம கிருஷ்ணர். (Sree Rama Krishna.)

* * *

தமது செல்வத்தையும் அதிகாரத்தையும், தமது பெயரையும் கீர்த்தியையும் ஜனசமூகத்தில் தமது உயர்ந்த நிலையையும் பற்றிப் புகழ்வார் பலர். ஆனால் அவையாவும் சிலதினங்களுக்கே நிலைப்பனவாகும். அவற்றிலொன்றேனும் மரணத்தின் பின் அவரோடு செல்வதில்லை. —ஸ்ரீ ஸ்ரீஇராமகிருஷ்ணர். Sree [Rama Krishna]

THE EXPOSITION OF KNOWLEDGE.

அறிவு விளக்கம்

(தொடர்ச்சி)

பழமைக்கிரங்கி— அப்பா! இளையோனே! நீ எடுத்துக் காட்டிய அந்தரங்க பக்தியின் சரிதையைக் கேட்க உண்டான குதூகலத்திற்கு அளவில்லை.

"கைம்மாறுவேண்டா கடப்பாடுமாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோவுலகு".

எனும் தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவர் வாக்கை யுணர்ந்த நீ மேகம் போல் பதிலுதவி விரும்பாமல் நற்புத்தி விளக்கினை. இங்ஙனம் விளக்கியவாறே அனன்னிய பக்தியை அனுஷ்டித்துப் பேறுபெற்றவர்களைப் பற்றிச் சரித்திரமுண்டேல் அறிவிக்க வேண்டுகிறேன்.

உண்மை விரும்பி —மூத்தோனே!

"தேம்படுபனையின் திரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெறவளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே".

எனும் நறுந்தொகை வாக்கியத்திற் கிணங்கப் பயனின்றி உடலைவளர்த்த நீ சிறிதும் பக்தியின்றி விழலுக்கிறைத்த நீர்போல் இவ்வொரு ஜன்மம் எடுக்கும்போதெல்லாம் அந்தந்த மத ஆசாரியர்களால் உபதேசம்பெற்றுக் கர்மமே செய்துவந்தாய். நின் மூத்தோனாகிய பற்றறு நம்பியையும் அந்த காமதநதை மாத்திரம் அனுஷ்டிக்கச் செய்தாய். இவ்வாறு கிஞ்சித்தும் பக்திசெய்யாது வாளாகெட்டுப்போனீர்கள். அதைக் கண்ட யான் மனந்தாளாமல் உங்களிருவருக்கும் பக்தி விஷயம் போதிக்கின்றேன். அனன்னியபக்திக்குக் கதை வருமாறு—சதானந்த வெளியிற்றோற்றிய இவ்வுலகில் தூர்க்குணவடிவினர்களாகிய இரணியன் இரணியாட்சஸன் எனும் இரண்டு சகோதரரிருந்தார்கள், அவர்களில் தூர்க்குணத்தின சுழுத்தி அம்சமாகிய இரணியாட்சஸன் ஒரு சமையத்தில் மனத்தோற்றமாகிய பூமியைச் சுருட்டி மாயை யெனும் சமுத்திரத்தில் மறைத்த குற்றத்திற்காக ஆனமரூபியான விஷ்ணு வராகரூபமாய்க் கோபித்தெழுந்து அவனைச் சங்கரித்து சாக்ஷிர சொற்பனவடிவமான பூமியை வெளிப்படுத்தினார். அப்போது தூர்க்குண அகங்கார மண் வடிவமாகிய இரணியன் தன்னையன்றிச் சர்வாங்க வியாபக ரூபியான விஷ்ணுவெனுங் கடவுள் ஒருவனிருக்கிறானென்று பெருமூச்செறிந்து தலையை அசைத்தான். பிறகு இரணியன் தன் சித்திரைத் தோற்றமான சகோதரனைக் கொன்று தனக்கு சித்திராபக்கம் வருவித்த விஷ்ணுவெனும் வியாபகத்திருடனைத் தான் விழிப்போடிருந்து கண்டுபிடித்துக்கொல்வதாக வைராக்கியஞ்செய்து கொண்டான். மண்ணாகிய சரீரமே நானெனும் இரணியனுடைய மனைவியாகிய காரிருள் வடிவமான பிரகிருதித் தோற்றமாகிய நீலாவதியின் கர்ப்பத்தில் விஷ்ணுவின் சத்வகுணவடிவமே யோருருப் பெற்று பிரமத்தில் ஆக்லாதமுற்ற பிராக்லாதனெனும் ஒரு சிசு தோன்றியது. பிறகு அச்சிசு கருப்பையில் கண் மூடியவண்ணம் பத்மாசனமூர்த்து பூர்வஞான முடையதாய், "இக்காரிருளான விடத்தில் என் கர்மத்தால் சரீரமடைந்தனன். ஆயினும் நான் பிரமதேஜஸ் ஆனபடியால் எனக்கென்னகுறை? இனி சரீர அபேக்ஷையின்றி யிருப்பே'னென்று திருப்திசெய்து கொண்டது, அச்சமயத்தில்

ற் சாக்ஷி ஸ்வரூபன கம்பீர வருவமான மத்தியஸ்தானம் சகல சர்வலோக பாதலோகாதி மெனும் திரிலோகத்திலும் சஞ்சரிக்கின்ற கலகமனமெனும் நாரதர் அக்கினிக்கு எம்கு ஞூபத்தியுண்டாகும்படி "ஓம் நாராயணாய நம" எனும் அஷ்டாக்ஷரம் உபதேசித்தார். அது முதலும் அதற்கு முந்தியும் அதற்குப் பிந்தியும்" அவனைப் பரியோர் ஆனுவு மாசையாது என்பதைக் கடைப்பிடித்த பிரக்லாதன் சதாசந்தோஷியிருந்தான். பத்துமாதம் சென்றபின் கருப்பையைவிட்டு வெளிவந்தான். பிறகு தாயானவள் ஸ்நானஞ் செய்விக்கும்போ தெல்லாம் மண்ணாலாகிவந்த சரீரம் மண்ணாகு மென்பதைத் தெரிவிப்பதற் கடையாளமாக மண்ணைக்குழைத்துக் குழந்தையின் நெற்றியில் பொட்டிட்டுக் காட்டுவாள். இப்படி உத்தோற்றம் என்றும் நிலையல்லவென்பதைத் தெரிவிப்பதற்கடையாளமாய் உருவுள்ளாய் உரு உளாய் என்று சீராட்டுவள். மாதா பிதா சகோதரன் சகோதரி முதலிய உறவினரும் மற்றவரும் சக்கரையிற்கட்டமாகையால் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லை யென்பதைத் தெளிவிப்பதற் கடையாளமாக ஆராரோ ஆராரோ வென்று தாலாட்டுவாள். இவ்விதமாய் பிரக்லாதன் தாயுபதேசம் பெற்று வளர்ந்து வருங்காலையில் துர்க்குணவடிவினராகிய அசுரர்களுக்குக் குருவாகிய ஞானக்கண்ணிழந்து அஞ்ஞானக் கண்ணொன்று மாத்திரமுற்ற சுக்கிராசாரியரிடம் (ஐந்து வயதான பிரக்லாதனை) வாசிக்க விட்டார்கள். அச்சுக்கிராசாரியர் பிரக்லாதனுக்கு "இரணிய நம; இரணிய நம" என்று போதித்தார். மெய்ஞ்ஞானவடிவினனான பிரக்லாதன் ஹரியினிடம் அனன்னிய பக்தியுடையவனாதலால் சுக்கிராசாரியருடைய [illegible]திருப்புன்னகைகொண்டு "ஐயா! உபாத்தியாயரே! இரணியனென்றால் [illegible]. "இரணிய கர்ப்பபூதேசு பிரஜாபதி லாக ஸ்ரீமான்" எனும் வேதவாக்கியம் அறி[illegible]ரா" என்று கேட்டான். அதற்குசுக்கிராசாரியர் "என்னடா! பயலே! எதிர்த்து வார்த்தையாடுகிறாய். யான் சொன்னபடி சொல்லாவிடில் தண்டிப்பேன்" என்றார். பிரக்லாதன் மனம் நொந்து "மண்ணாலாகிய சரீரமேயானென்று எண்ணிய ஆசிரியரே! யான் "ஹரிநம; ஹரிநம" என்று சொல்வதைக்கவனியுங்கவனியும்" என்று பலதரம் கூறினான். இவ்விபரீதமான வார்த்தையைக் கேட்ட சுக்கிராசாரியர் துக்கிக்கிறவராய் "இப்பிள்ளையைத் திருப்ப நம்மாற் சாத்தியப்படாது. அரசனால் யாதொரு லாபமும் கிடைக்காது" என்றறிந்தவராய் இவ்விஷயத்தை இராஜனுக்குத் தெரிவிக்க அவனிடம் சென்றார். இரணியன் தன் ஆசிரியருக்குச் சோடசோபசாரத்துடன் ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து தானெழுந்து ஆசிரியரை வணங்கி "சுவாமி! என் முகவாட்டமாயிருக்கிறீர்?" என்று விசாரித்தான். இதுதான் தற்சமயமென்று சுக்கிராசாரியர் இராஜனைப்பார்த்து "ஐயா! இரணியபூபதியே! உமதுகுமாரன் "இரணியாய நம" என்று கற்பித்தால் அதைச்சொல்லாமல் உமக்குப் பகைவன்பெயராகிய "ஹரிநம" என்று கூறுகின்றான். அவனைத் திருப்ப என்னால் முடியாது" என்றனர். இதைச் செவியேற்ற இரணியன் கோபித்தெழுந்து தன் குமாரனை வரவழைத்து விசாரித்தான். அப்போதும் பிரக்லாதன் அச்சமின்றி "ஹரிநம; ஹரிநம" என்றே கூறினான். இரணியன் மனச்சஞ்சலமுற்று தன் மனையாளை வரவழைத்துத் தன் குமாரனுடைய துர்க்குணத்தைத் தெரிவித்து "சகியே! "இவன் தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்பதை யுணர்ந்தவனல்லன். இவனைக் கொன்றுவொழிய நாம் சுகப்படோம்" என்று சொன்னான். அதற்கு லீலாவதி தான் மாயாரூபியானதால் இரணியன் சொற்கு இணங்கினள். உடனே இரணியன் மல்லர்களை அழைத்து ஹரிநம வென்று சொல்லுகின்ற வாயில் பிரக்லாதனை வதைக்கும்படிக்கும், இரணியாய நம வென்று சொன்னால் தன்னிடம் அழைத்துவரும்படியுங் கட்டளையிட்டான். மல்லர்கள் இராஜனுடைய கட்டளைப்படி பிரக்லாதனைப் பலவிதமாகிய கஷ்டப்படுத்தியும் பிரக்லாதன் கர்ப்பத்திலிருந்து அடைந்த அநுபூதி வாக்கியத்தை விடாமல்

திரிசான சந்தமாய் "ஹரிநம; ஹரிநம" என்று உரைத்தான். இதைத்தம்பிமீலர்கள் செய்த கொடுமையால் பிரக்லாதனுக்கு யாதொருதீங்கும்நேராததைமல்லர்கள் கண்ணுற்று இரணியனிடம் தெரிவித்தார்கள். இரணியன் அகோர கோபமுண்டவனாய்ப் பிரக்லாதனை வரவழைத்து "வாழையின்குலை வாழைமரத்துக்கு யமனாதல்போல்தோன்றினையே" என்று பழித்து அதட்டிக்காட்டி "அப்பா! பிரக்லாதா! நீ கூறும் ஹரி எங்குளன்? அவனுக்குச் சுதந்தரசக்தியுளதா? அவனைப்பற்றி நீ என்னஅறிந்து தித்திக்கமொழிப் போகிறாய்? பொருத்தமாய் விளக்குவாயாக"வென்றான. அவ்வாறுகூறிய தந்தையைப் பிரக்லாதன் பார்த்து "ஐயா! அந்த ஹரியின் பிரதாபத்தை எடுத்துரைக்க ஆயிரம் நாவுள்ள ஆதிசேடனாலும் முடியாது. அவரோ மனோவாக்குக் கெட்டாதவராயினும் நீ கேட்டபடியால் நானறிந்தவரையில் தெரிவிக்கின்றனன். ஐயா! நீ முதல் சகல தோற்றங்களழியினும் ஹரியென்பவர் அழியாதவர். இடமெங்கும் நிறைந்தவர். அவரை யறிந்தவரும் அறியாதவரும் அறிந்து அறியாதவரும் இலர். அவரோ நித்தியர், நிர்மலர், நிரஞ்சனர், நிராமயர், நிருபாதிகர். தந்தையே! அவ்ஹரி எங்கிருக்கிறார் என்றால் சகல லோகங்களும், அந்த லோகங்களை [illegible]. சிருஷ்டி-ஸ்திதி-சம்ஹாரஞ் செய்யும் பிரமா, விஷ்ணு, ருத்திரன் முதலிய ஈஸ்வரர்களும், லோகங்களில் வசிக்கும் தாவரஜங்கம வஸ்துக்களும் ஒடுங்கும் பிரகிருதி சொருபத்திற்கப்புறம் [illegible]யெவ்வீற்றிருக்கிறார். இவ்வித நிர்குணரூபனைச் சகுணமாய்த் தரிசிக்கவேணுமானால் உன்னிடமும், என்னிடமும், தூணிலும் துரும்பிலும், அணுவிலும், பரமாணுவிலும் அந்தர்யாமியாய் உள்ளும் புறம்பும்நிறைந்திருந்து நினைத்தபோது வெளிப்பட்டு நாமசொரூபமாய்த் தரிசனம் கொடுப்பார்" என்றான். உடனே இரணியன் பிரக்லாதனைப்பார்த்து "அடா! மூடபுத்திரனே! என் எதிரிலுள்ள இத்தூணில் காட்டுவையா?" என்றான். பிரக்லாதன் "அந்த ஹரியை இடைவிடாது நல்மனதால் தியானம் செய்பவர்கள் எந்த சமயத்திலும் எந்த இடத்திலும் எந்த ரூபமாகவாயினும் தரிசிக்க விரும்பினால் தரிசனம் கொடுக்கத் தடையில்லை. ஆகையால் நீர் குறிக்கும் தூணிலிருந்து அவசியம் வெளிப்படுவார்" என்று சொன்னான். அவ்ஹரியைப் பிடித்து கொல்லவேணுமென்ற இடைவிடாச் சிந்தையுற்ற இரணியன் வாளை உருவிக்கொண்டு கோபத்துடனெழுந்து தன் எதிரிலுள்ள தூணையுதைத்தான். உடனே ஆன்மரூபியான ஹரியானவர் ஜீவரூபியான பிரக்லாதனை தன்னோடு ஐக்கியப்படுத்தும்பொருட்டும், சரீரமே தானென்னும் அகங்காரரூபியான இரணியனை வதைக்கும்பொருட்டும், சலனமற்ற மனரூபமான தூணிலிருந்து அஞ்ஞானவடிவமாகிய கோரவிருத்தி[illegible] நாசஞ்செய்யும் நரசிங்கவடிவமாய் வெளிப்பட்டார். அவ்வுருவைத் தரிசித்த பிரக்லாதன் ஆனந்த பரவசமுற்றுத் துதிசெய்தான். இரணியன் கோபத்துடன் நரசிங்கரூபியின்மேல் சண்டைக்குச் சென்றான். அவ்வான்மரூபியான நரசிங்கர் அகங்காரரூபமான இரணிய சரீரத்தைப் பற்றி நினைப்பு மறப்பற்ற இடமெனும் பகலிரவற்ற இடத்தில் கிழித்து எறிந்தார். பூஜைக்கிரங்கியவே! பிரக்லாதனுடைய அனன்னியபக்தியைப் பார்த்தீரா? எல்லாம் கடவுளே யெனவும் தானும் அவருக் கன்னியமாய் இன்றெனவும் அவனுக்கிருந்தநிலைத்தைக் கவனியும். இப்பக்தியுடையாரே முத்திவீட்டில் நிலைபெறுவர். இதுவேமேலான பக்தி. மற்றபக்திகளெல்லாம் இதிலேறுதற்குப் படிகளேயாகும். இதனுண்மையை நன்றாக உணர்ந்துகொள்வீராக.

(இன்னும் வரும்)

ப. ஜயராமபிள்ளை.

STUDENTS' COLUMN.

மாணவர் பக்கம்.

THE LIFE—LINE.

வாழ்க்கை வழி

"நன்மையைத் தவிர மற்றெதையும் பார்த்தலை நான் முற்றிலும் ஒழிக்கிறேன்" இதை விசாரியுங்கள். இதைச் சொல்லுங்கள். இதன அர்த்தத்தைக் கிரகியுங்கள். இதனை ஒருபொழுதும் மறவாதேயுங்கள். 'நன்மையைத் தவிர மற்றெதையும் பார்த்தலை நான் முற்றிலும் ஒழிக்கிறேன்', நிலைமை எத்தனை கேவலமாயிருப்பினும் துன்பம் எத்தனை கொரேமாயிருப்பினும் சம்பவம் எத்தனை துக்ககரமாயிருப்பினும் இவ்வார்த்தைகளை விடாது பற்றுவதாய் நிச்சயித்துக்கொள்ளுங்கள்.

அத்தகைய கஷ்ட நிலைகளில் இவ்வெண்ணத்தை விடாதுபற்றுவது மிகவும் கடினமாய் அந்தோ! அசாத்தியமாகவே யிருக்கின்றதே! உங்களுடைய பிறவிப்பிணியிலிருந்து உங்களை விலக்கவும் உங்கள் முயற்சிகளை யெல்லாம பயனற்றதாக்கவும் செய்கிற அதைரியத்தைப் போக்குதல் அவ்வளவு வருத்தமாயிருக்கின்றது ஆயினும் அதைரியத்திற்குச் சிறிதும் இடங்கொடாதேயுங்கள். அதைப் பற்றிய எண்ணத்தை உங்களைவிட்டு அடித்துத் துரத்துங்கள். நன்மையைத்தவிர மற்றதையும்பார்த்தலையொழியுங்கள்.

கடவுளை விசுவாசிக்கும் எத்தனையோகோடி ஜனங்களை விசாரித்துப் பாருங்கள். அவர்களுக்காவது உங்களுக்காவது நம்மில்யாருக்காவது நன்மையினிடத்தில் முற்றிலும் நம்பிக்கையுண்டா? நமக்கு ஒருபொழுதும் சந்தேகமோ அவநம்பிக்கையோ உண்டாகாதவிதத்தில் அவ்வளவு பூர்த்தியா யுண்டா? ஆனால் கடவுளை விசுவாசித்தல் என்பதின் எதார்த்த தாத்பரியம் அஃதேயாகும்.

உங்களைச் சேர்ந்துள்ளார் உலகப்பற்றுடையோராயும் சுயாபிமானம் பாராட்டுபவராயும் உங்களுடைய மேலான எண்ணங்களுக்கெல்லாம் நேர்விரோதிகளாயும் இருத்தல் கூடும். ஆதலால் அதைரியப்படாதேயுங்கள். நன்மையைத் தவிர மற்றெதையும் பார்த்தலை ஒழியுங்கள். இவ்வழியில் உங்களுக்குண்டாகும அனுபவங்களையே அப்பியாசமாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குச் சமீபத்திலும் பிரியமாயும் இருப்பவர்கள் உங்களையும் உங்களுடைய உத்தேசங்களையும் தப்பிதமாய் நிதானிக்கவும கிரகிக்கவும் கூடும். உங்களுடையசந்தோஷகரமான எண்ணங்களும் உத்தேசங்களும் டம்பீகரமாகப்போவதாய்த் தோற்றலாம. ஆனால் இவ்வார்த்தைகளை மாத்திரம் விட்டு விடாதேயுங்கள். தவறுதல் தோற்றமாத்திரமே, "நன்மையைத்தவிர மற்றெதையும் பார்த்தலை நான் முற்றிலும ஒழிக்கிறேன்."

அநித்தியத்தைப் பற்றிய எண்ணங்களென்னும் அலைகளில் உதவியற்று மொத்துண்ணும் உங்களுக்கு இதுவே உத்தமமான வாழ்க்கைவழி. உங்களைச் சுற்றிலும் இடைவிடாது புசல் அடிப்பதை நீங்கள் உணருகிறீர்கள். மலைபோல் எழும் அலைகளையும் பயங்கரமான மின்னலையும் கொரமான பெருங்காற்றின் முழக்கத்தையும் பார்க்கும்பொழுது உங்களுடைய ஜீவன் நடுங்குகிறது உங்களுடைய வாழ்க்கைக் கப்பலின உடைவை நம்பிக்கையற்றவர்களாய்ப்பார்க்கிறீர்கள் எல்லாம், எல்லாம் போய்விட்டன! அவ்விதமாக நீங்கள் கவலைப்படுகிறீர்கள். நீங்கள் அமிழ்கிறீர்கள்! அமிழ்கிறீர்கள்! அவநம்பிக்கையோடு உங்களுடைய கைகளைஅலைகளில் எட்டிப்போடுகின்றீர்கள். அந்தோ! இதோ இருக்கின்றது வாழ்க்கைவழி—"நன்மையைத் தவிர மற்றெதையும் விசுவாசித்தலை நான் முற்றிலும் ஒழிக்கிறேன், எல்லாம் நன்மையே".

இவ்வாக்கியத்தைக் கடைப்பிடியுங்கள். அது உங்களைரக்ஷிக்கும். அது உங்களை துக்கம் நாசம் என்பவற்றிலிருந்து விடுவித்து ஆபத்துக ளெல்லாவற்றையும்விலக்கி புசல் அடங்ினதும் அலையற்றதுமான இராஜ்யத்தில் கொண்டுசேர்க்கும. அவ்விடத்தில் உங்கள் ஆத்மா பிரகாசத்தில் மூழ்கி சாந்தநதை யடையும்.—UNITY.